1986 நவம்பர் 25]

(முற்பகல் 11–10)

(ஔ) சமயபுரம் மாரியம்மன் கோவில் நகைகள் திருட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கி. வெங்கடாசலம், என்.எஸ்.வி. சித்தன், ந. மாசிலாமணி, அ. மலர்மன்னன், செ. இரத்தினவேலு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

**மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள மூலவர் அம்பாளுக்கு சாத்தப்பட்டு இருந்த தங்க கவசத்தில் 1-11-1986 அன்று திரு ஜெம்புநாத குருக்கள் முறை முடிந்து அடுத்த முறை குருக்களாகிய திரு வேம்பு குருக்கள் 2-11-86 அன்று காலை 5.30 மணிக்கு கதவு திறந்து நகைகளை சரிபார்த்த போது மூலவர் அம்பாளுக்கு சாத்தப்பட்டிருந்த தங்கக் கவசத்தில் இடது பாகத்தில் சிறிய விரல் நுழையும் அளவிற்கு ஒடிந்து இருந்தது என்றும், அதில் வளைந்திருந்த சுமார் 1/2 ரூபாய் சுற்றளவு தகடு எப்படியோ ஒடிந்து காணாமல் போய்விட்டது என்ற விபரத்தினை மணியத்திடம் திரு வேம்பு குருக்கள் தெரிவித்துள்ளதாக திருச்சி துணை ஆணையர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி இழப்பு குறித்து சம்பந்தப்பட்ட குருக்கள் விபரம்:

1. திரு ஜம்புநாத குருக்கள்
2. திரு வேம்பு குருக்கள்
3. திரு சுப்பிரமணிய குருக்கள்

2. மேற்படி இழப்பு தொடர்பாக மேற்படி குருக்கள் ஒரு மனுவை கொடுத்து செயல் அலுவலரிடம் ஒப்படைக்கும்படி மணியத்திடம் தெரிவித்துள்ளார். முறை ஒப்படைப்பவர்/முறை ஒப்புக் கொள்பவர்கள் கொடுத்த மனுக்களை உதவியாளர் திரு கந்தசாமியால் 3-11-86 அன்று பெற்று அலுவலகத்தில் 4-11-86-ந் தேதி ஒப்படைக்கப்பட்டது.

3. மேற்படி திருக்கோயில் செயல் அலுவலர் 5-11-1986-ம் தேதியில் நகைகளை நேரில் சென்று பார்வையிட்டு நான்கு பாகங்களைக் கொண்ட தங்க கவசங்கள் அனைத்தையும் எடுத்து வரச் செய்து அலுவலகத்தில் குருக்கள் முன்னால் எடை போடப்பட்டது.

1986 நவம்பர் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

4. எடை போட்டதில் குறைவு ஏற்பட்டுள்ளது. குறைந்த எடையின் அளவு 70 கிராம் ஆகும். மூன்று குருக்கள்களும் மூலஸ்தானத்தில் தங்கள் மூவரையும் தங்களுக்கு ஒத்தாசையாக கைங்கர்யம் செய்பவர்களையும் தவிர யாரும் பிரவேசிப்பதில்லை எனவும், ஆதலால் மேற்படி கவசத்தில் இருந்து துண்டுகள் மூலஸ்தானத்தில் எங்காவது விழுந்திருக்கிறதா அல்லது தங்களுக்கு ஒத்தாசையாக கைங்கர்யம் செய்ய வந்தவர்கள் யாரேனும் தவறு செய்து விட்டார்களா என்பதை அறிந்து தெரிவிப்பதற்கு சிறிது அவகாசம் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும் தங்களின் கவனக் குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்ட இந்த இழப்பிற்கு தாங்களே பொறுப்பு என்றும், அதற்குண்டான மதிப்பு மற்றும் புதுப்பிக்க ஆகும் செலவுவகையறாவுக்கு, தொகை ரூ. 25,000—யை மூன்று குருக்கள்களாலும் பலவகை ரசீது எண். 3282/11-1-86-ல் செலுத்தப்பட்டு ஆலயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

5. இழப்பு ஏற்பட்டுள்ள தங்க கவசங்கள் புதியதாக செய்து கொடுப்பதற்கு கீழ்க்கண்ட விவரப்படி ஸ்ரீரங்கம் அருள்மிகு ரீரங்கநாதசுவாமி திருக்கோயில் நகை செய்யும் தொழில் வல்லுநர் திரு ஆர். பாண்டுரங்கன் என்பவரால் மதிப்பீடு செய்து கொடுக்கப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்க ஹஸ்தம் | 754 கிராம் |
| இடது பாதம் | 950 கிராம் |
| | 1704 கிராம் |

செய்வதற்கு கூலி 1 கிராமுக்கு ரூ. 4 வீதம் கூடுதல்—ரூ. 6,816.00
சேதாரம் 100 கிராமிற்கு 2 கிராம் வீதம்
1704 கிராமிற்கு சுமார் 34 கிராம்
இதற்கு கிராம் 1க்கு ரூ. 235-வீதம் கூடுதல்—ரூ. 7,990.00

கூடுதல்—ரூ. 14,806.00

மேற்படி இழப்புகள் குறித்து 14-11-86 அன்று செயல் அலுவலரால் காவல் துறையினரிடம் புலன் விசாரணைக்கு புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காணாமற் போயுள்ள பாகங்களை இரண்டு இனங்களிலும் கவசத்தினை உருக்கி புதியதாக செய்து கொடுக்க 20 நாட்கள் ஆகும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.